தமிழ்நாடு அரசு
2009

பதிவெண் : எம்.

# திருவள்ளூர் மாவட்ட அரசிதழ்

## சிறப்பு வெளியீடு

ஆணையின்படி வெளியிடப்பட்டது

திருவள்ளூர், பிப்ரவரி 5, 2009

[ எண் 3

தை 23, திருவள்ளுவர் ஆண்டு—2040

## உள்ளாட்சித் துறை அறிவிக்கை.

### அபாயகரமானதும் அருவருக்கத்தக்கதுமான தொழில்களுக்கு உரிமைக் கட்டணம் திருத்தி விதித்தல் குறித்த அறிவிப்பு.

மாதவரம் நகராட்சி

(ந.க. எண் 7077/2008/எச்1, 6—1—2009)

(திருத்தப்பட்ட 1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 249,255,258,259 மற்றும் 270 உட்பிரிவுகளின்படி பொது சுகாதார சட்டம் ஆகிய பிரிவுகளின்கீழ் செய்யப்படும் அறிவிப்பு).

மாதவரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அபாயகரமானதும் அருவருக்கத்தக்கதுமான தொழில்களுக்கு வசூலிக்கப்பட்டு வந்த உரிமையாணை கட்டணங்களை 1—4—2009 முதல் திருத்தியமைக்க நகர்மன்றம் தனது தீர்மான எண்: 245, நாள்: 31—10—2008-ல் தீர்மானத்தை தொடர்ந்து திருத்தியமைத்து வசூல் செய்ய உத்தேசிக்கப்பட்ட உரிமையாணை கட்டணங்களுக்கு ஆட்சேபனைகளோ அல்லது ஆலோசனைகளோ ஏதும் இருப்பின் அதனை 30 நாட்களுக்குள் நகராட்சி அலுவலகத்திற்கு தெரிவிக்குமாறு 3—12—2008 ஆம் நாளன்று செய்தித்தாளில் விளம்பரம் செய்யப்பட்டது.

மேற்கண்ட நாள் வரை ஆட்சேபனைகளோ அல்லது ஆலோசனைகளோ இந்நகராட்சிக்கு வரப்பெறவில்லை.

எனவே, இதன்மூலம் பொதுமக்களுக்கு அறிவிப்பது யாதெனில்—இத்துடன் இணைக்கப்பட்டுள்ள விகிதாச்சார அட்டவணையில் கண்டுள்ள மாற்றியமைக்கப்பட்ட கட்டணம் 1—4—2009 முதல் அமுலுக்கு வரும் என்பதை இதன்மூலம் அறிவிக்கப்படுகிறது.

1—4—2009 முதல் அபாயகரமானதும் அருவருக்கத்தக்கதுமான தொழில் மற்றும் வியாபாரங்களுக்கு மாற்றி அமைத்து வசூல் செய்ய உத்தேசித்துள்ள புதிய உரிமையாணைக் கட்டணம் (ஓர் ஆண்டிற்கு).

அட்டவணை

| வரிசை எண். | வியாபாரம் மற்றும் தொழில்களின் விவரம். | நகராட்சி சட்ட பிரிவு எண். | மாதவரம் நகராட்சி பழைய கட்டணம். | உத்தேசிக்கப் பட்ட கட்டணம். | நகர் மன்றத்தால் முடிவு செய்யப் பட்ட கட்டணம். |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| | | | ரூபாய். | ரூபாய். | ரூபாய். |
| 1 | அழுக்கான துணிகளை சுத்தப்படுத்துதலும் சுத்தப்படுத்த வைத்திருக்கும் துணிகளையும் சுத்தப்படுத்தப்பட்ட துணிகளையும் வைத்திருப்பது. | செக்ஷன் 249 ஷெட்யூல் (ஏ) | புதியது | 300 | 300 |
| 2 | நெல் வேகவைக்கும் அல்லது அரைக்கும் இடத்திற்கு— | (பி) | | | |
| | தனிப்பட்ட உபயோகத்திற்கு அல்லாமல் வியாபார உபயோகத்திற்கு நெல் அவித்தல். | | 500 | 1,500 | 1,500 |
| | (அ) நெல் சேமித்து வைக்க | | 125 | 475 | 475 |
| | (ஆ) அரிசி மொத்த விற்பனை | | 300 | 900 | 900 |
| | (இ) அரிசி சில்லரை விற்பனை | | 25 | 150 | 150 |
| | (ஈ) கற்பூரம் தயாரித்தல் | | 125 | 400 | 400 |
| 3 | (அ) மாட்டுக் கொழுப்பு அல்லது கந்தகத்தை உருக்குவது | (சி) | 300 | 900 | 900 |
| | (ஆ) வெல்லம், கரும்பு சர்க்கரை மற்றும் சர்பத் (குடிசைத் தொழில் அல்லாதது) இயந்திரம் மற்றும் தயாரித்தல் | | 300 | 500 | 500 |
| | (இ) விற்பனை மற்றும் சேகரித்தல் | | 150 | 450 | 450 |
| | (ஈ) சர்க்கரை வெல்லம் கொண்டு மிட்டாய்கள் தயாரித்தல் | | | 1,000 | 1,000 |
| 4 | (அ) எலும்பு,கொம்பு போன்றவற்றை சேகரித்து வைப்பது அல்லது விற்பனை செய்வது | (டி) | 300 | 600 | 600 |
| | (ஆ) ஆடு,மாடு இவற்றின் தோல் விற்பனை செய்வது | | | 500 | 500 |
| | (இ) இரத்தம் அல்லது கந்தல் துணி அல்லது கொழுப்பு முதலியவற்றை சேர்த்து வைத்தல் அல்லது வேறு ஏதாவது செய்தல். | | | 400 | 400 |
| | (ஈ) மீன் அல்லது கருவாடு விற்பனைக்காக மொத்தமாக சேர்த்து வைப்பது | | 500 | 950 | 950 |
| | (உ) மீன் அல்லது கருவாடு விற்பனைக்காக சில்லரையில் சேர்த்து வைப்பது | | 250 | 400 | 400 |
| | (ஊ) மீன் மற்றும் அது போன்ற பொருட்களை ஏற்றுமதிக்காக சேர்த்து வைத்தல் | | | 1,000 | 1,000 |
| 5 | 1. ஆட்டுத்தோல் மற்றும் மாட்டுத்தோல் மற்றும் பாம்புத் தோல் பதப்படுத்துதல் மற்றும் உபயோகித்தல் | 249(ஈ) | | 600 | 600 |
| | (அ) வேலையாட்கள் 9 வரை | | 250 | 500 | 500 |
| | (ஆ) வேலையாட்கள் 10 லிருந்து 25 வரை | | 300 | 600 | 600 |